[1982 மார்ச் 4

கொடைக்கானலில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 348—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு நவீன பேருந்து நிலையம் கட்டும் திட்டத்தை நகரியக்குழு அங்கீகரித்துள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதுள்ள பஸ் ஸ்டாண்டில் 3 பஸ்களுக்கு மேல் நிற்கத் தகுதி இல்லாத நிலைமையில் இருக்கிறது. மீதமுள்ள பஸ்கள் நடுரோட்டில் நிற்கின்றன. அதனால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால் புது பஸ் ஸ்டாண்டை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்காகக் கொடைக்கானலில் 8.79 ஏக்கர் பரப்பளவுள்ள தனியார் இடத்தை Woodhill Compound என்ற இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக இந்தத் திட்டத்திற்கு 65 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு முதல் கட்டமாக 20 லட்சம் ரூபாய் கேட்கப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைக்கப்படவிருக்கும் பஸ ஸ்டாண்டில் கடைகளும், தங்குவதற்கான அறைகளும் கட்டப்படுமா ? அதைக் கட்டுவதற்கான உத்தேச மதிப்பீடு என்ன ? பஸ் ஸ்டாண்ட் எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப் பட முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கடைகள் கட்டுவது, பேருந்து நிலையத்தில் பஸ்கள் நிற்கின்ற இடங்கள் கட்டுவது ஆகிய

1982 மார்ச் 4]

இவைகளுக்கெல்லாம் சேர்த்துத்தான் 65 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 20 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடிய அந்தப் பேருந்து நிலையத்தை மாற்றி Woodhill Compound என்ற இடத்தை அரசாங்கம் எடுத்து அங்கே அந்தப் போக்குவரத்து நிலையத்தை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறது. ஆனால், அந்த Woodhill Compound என்ற இடத்தை வாங்குவதற்கு அதன் சொந்தக்காரர்கள் சில தடங்கல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்தத் தடங்கலெல்லாம் நீங்கி இப்பொழுது அந்த இடத்தை அரசாங்கம் முழுமையாகப் பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, அந்தப் பேருந்து நிலையத்தை ஏற்படுத்தும்பொழுது அதன் உள்ளேயே டாக்சி ஸ்டாண்டையும் கொண்டுபோனால் இன்னும் போக்குவரத்திற்குச் சாதகமாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை அரசாங்கம் ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, Woodhill Compound என்ற இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தடைகள் இருப்பதாக என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. ஆனால் தடைகள் இருந்தாலும் அவைகள் நீக்கப்படவும், உடனடியாக அந்த இடத்தை எடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதே நேரத்தில் பேருந்து நிலையத்தை நல்லமுறையில் அமைப்பதற்காக ஏற்கனவே பாண்டியன் போக்குவரத்துக் கழகம்கூட எடுத்துக்கொள்வதாக இருந்தார்கள். ஆனால் நகரியத்தினுடைய வருமானத்தை முன்னிட்டு நகரியமே இதை ஏற்று நடத்த வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, தகுந்த முறையில் சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சாலைகள் அமைப்பதற்குத் தேவைப்படும் தார்.

* **வினா எண் 349.—திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூசியில்லாச் சாலைகள் அமைப்பதற்குத் தேவையான தார் கிடைக்காததால் கிராமப் பகுதிகளில் திட்டமிடப்பட்டுள்ள சாலை சீரமைப்புப் பணிகள் தேக்கமடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?